<u>சுருக்கம்</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – 41 நகராட்சிகள் – நகரமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அரியலூர், பள்ளப்பட்டி, பள்ளிப்பாளையம், இராசிபுரம், குமாரபாளையம், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, பெரம்பலூர், இராமநாதபுரம், கீழகரை, பரமக்குடி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், கொடைக்கானல், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சிதம்பரம், பண்ருட்டி, தருமபுரி, பவானி, கோபிச்செட்டிப்பாளையம், புஞ்சைபுளியம்பட்டி, சிவகங்கை, கோவில்பட்டி, முசிறி, இலால்குடி, துறையூர், திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணி, ஆரணி, திருவத்திபுரம், வந்தவாசி, மன்னார்குடி, திருவாரூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, இராஜபாளையம், தேனி–அல்லி நகரம், பெரியகுளம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 41 நகராட்சிகளின் எல்லைகளை விரிவாக்கம் செய்தல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5(2)) துறை</u>

அரசாணை (நிலை) எண்.202

நாள்.31.12.2024

திருவள்ளுவராண்டு 2055

ஸ்ரீ குரோதி வருடம், மார்கழி 16

படிக்கப்பட்டவை:-

(1) அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 23.11.2023.

(2) அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 2102/ அ3 /2023, நாள் 21.12.2024

(3) கரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். 1056/ 2024/ எப்1, நாள் 16.12.2024

(4) நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். ஒ்1/ 13296/ 2024, நாள் 20.12.2024

(5) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 3637/ அ2/2021, நாள் 21.12.2024

(6) மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 6267/ எப்1 / 2024, நாள் 21.12.2024

(7) பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 10826/ எப்1/2024, நாள் 12.12.2024

(8) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 7428/ நி–6 / 2023, நாள் 21.12.2024

(9) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். 2920/ 2024/அ2, நாள் 20.12.2024

(10) திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். 2209/ 2024/அ2, நாள் 20.12.2024

(11) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 5134/ அ4/2023, நாள் 21.12.2024

(12) கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 04/பி1/ 2024, நாள் 21.12.2024

(13) தருமபுரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். 1424/ 2024/அ2, நாள் 20.12.2024

(14) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 926/ அ4/2022, நாள் 21.12.2024

(15) சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 187/ அ2/ 2022, நாள் 21.12.2024

(16) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். ஊநி–1/ 2431/2024, நாள் 21.12.2024

(17) திருச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 1500/ அ8/ 2024, நாள் 21.12.2024

(18) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 1800/ அ3/2024, நாள் 20.12.2024

(19) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 6851/சி1/2024, நாள் 21.12.2024

(20) திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 3327/ அ2/2024, நாள் 20.12.2024

(21) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 89/ எப்1(2)/2024, நாள் 20.12.2024

(22) நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 2042/ அ3/2023, நாள் 20.12.2024

(23) தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண். 38303/ க்யூ3/2023, நாள் 21.12.2024

*******

<u>ஆணை:–</u>

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–2022–ஆம் ஆண்டுக்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

"2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021–ஆம் ஆண்டு தற்போதைய

சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாத்தாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது."

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, அதாவது, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அருகருகே அமைந்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதன் மூலம் புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், எல்லைகளை விரிவாக்கம் செய்தல் போன்றவற்றை ஆய்வு செய்து தக்க செயற்குறிப்புகளை உருவாக்குதல், பரிந்துரைகளை அளித்தல் போன்றப் பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவொன்றை அமைத்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. இதனைத் தொடர்ந்து, உயர்நிலைக்குழு பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள்/விவாதங்களை மேற்கொண்டது. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம் தொடர்பாக, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த அலுவலர்கள் போன்ற தொடர்புடைய

அனைத்து தரப்பினரின் (Stakeholders) கோரிக்கைகள்/கருத்துகள் போன்றவை உயர்நிலைக்குழுவின் பல்வேறு கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு பல்வேறு தற்காலிக செயற்குறிப்புகள் (Tentative Proposals) உருவாக்கப்பட்டன.

4. இதனடிப்படையில், இப்பொருள் தொடர்பான பல்வேறு பொருண்மைகள் குறித்து உயர்நிலைக் குழுவால் 18.12.2024 அன்று காணொளி வாயிலாக 28 மாவட்ட ஆட்சியர்களுடன் இறுதி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. இந்நிலையில், 41 நகராட்சிகளின் எல்லைகளை விரிவாக்கம் செய்வது குறித்து மேலே 2 முதல் 23 வரை படிக்கப்பட்ட தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் செயற்குறிப்புகளின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:-

(1) அரியலூர் நகராட்சி:-

2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 86 சதவீத மக்கள் தொகையும் மற்றும் வேகமான நகர மயமாக்கல் காரணமாக அரியலூர் நகராட்சிக்கு அருகில் அமைந்துள்ள வாலாஜாநகரம், எருதுக்காரன்பட்டி, மற்றும் தவுத்தாய்குளம் பகுதிகளில் அதிகமான மக்கள் குடியேறி வருகின்றனர். இப்பகுதி மக்கள் பெரும்பாலானோர் விவசாயம் சாராத தொழில்களில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். இப்பகுதிகளில் நகர்ப்புரத்திற்கான கட்டமைப்புகள் தேவைப்படுகிறது. எனவே, இப்பகுதி மக்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் அரியலூர் நகராட்சியுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3 ஊராட்சிகளை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(2) பள்ளப்பட்டி நகராட்சி:

இந்நகராட்சிக்கு அருகில் அமைந்துள்ள லிங்கமநாயக்கன்பட்டி ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு கிடைக்கும். இதன் மூலம் இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு அவர்களுக்கு மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் கிடைக்கும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான பண்புகளை கொண்டுள்ளது. எனவே, பள்ளப்பட்டி நகராட்சியுடன் லிங்கமாநாயக்கன்பட்டி ஊராட்சியினை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(3) பள்ளிபாளையம் நகராட்சி:

பள்ளிபாளையம் நகராட்சியுடன் பள்ளிபாளையம் அக்ரஹாரம், சமயசங்கிலி அக்ரஹாரம், இலந்தக்குட்டை, காடச்சநல்லூர் மற்றும் தட்டான்குட்டை ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்கும் சென்றடையும். இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளை கொண்டுள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் வகையில்

பள்ளிப்பாளையம் நகராட்சியுடன் மேற்குறிப்பிடப்பட்ட 5 ஊராட்சிகளை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(4) இராசிபுரம் நகராட்சி:

இராசிபுரம் நகராட்சியுடன் பட்டணம் பேரூராட்சி, சந்திரசேகராபுரம் (பகுதி), கவுண்டம்பாளையம், முத்துகாளிப்பட்டி, எம்.கோனேரிபட்டி மற்றும் கட்டனாச்சம்பட்டி ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு சென்றடையும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்புர பண்புகளை கொண்டுள்ளது. எனவே, மேற்படி பேரூராட்சி மற்றும் 5 ஊராட்சிகளை இராசிபுரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(5) குமாரபாளையம் நகராட்சி:

குமாரகாளையம் நகராட்சியுடன் குப்பாண்டபாளையம் ஊராட்சி (வார்டு எண். 1, 2, 3, 4, 7, 8, 9 மற்றும் 10) இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு சென்றடையும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளை கொண்டுள்ளது. எனவே மேற்படி ஊராட்சியினை குமாரபாளையம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(6) கிருஷ்ணகிரி நகராட்சி:

கிருஷ்ணகிரி நகராட்சியுடன் கட்டிகானபள்ளி ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு சென்றடையும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்புர பண்புகளை கொண்டுள்ளது. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பையணப்பள்ளி, கட்டிகானப்பள்ளி மற்றும் வேங்கடபுரம் ஆகிய ஊராட்சிகளின் மக்கள்தொகை 94,037. அதன் பரப்பளவு 21.82 ச.கி.மீ. ஆகும். எனவே மேற்படி ஊராட்சியை, கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(7) மயிலாடுதுறை நகராட்சி:

மயிலாடுதுறை நகராட்சியுடன் மணக்குடி (பகுதி), மன்னம்பந்தல் (பகுதி), மயிலாடுதுறை ஊரகம் (பகுதி), நல்லத்துக்குடி (பகுதி), பட்டமங்கலம் (பகுதி), சித்தர்காடு மற்றும் மாப்படுகை (பகுதி), திருஇந்தளூர் (பகுதி) மற்றும் வள்ளாலகரம் (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்கும் கிடைக்கும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளை கொண்டுள்ளது. எனவே மேற்படி 9 ஊராட்சிகளை, மயிலாடுதுறை நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(8) பெரம்பலூர் நகராட்சி:

பெரம்பலூர் நகராட்சியுடன் எளம்பலூர், கோனேரிபாளையம், கவுல்பாளையம் (பகுதி) மற்றும் நொச்சியம் (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு சென்றடையும். இதன் மூலம் இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்கு கிடைக்கும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளை கொண்டுள்ளது. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி எலம்பலூர், கொன்னேரிபாளையம், கவுல்பாளையம் மற்றும் நொச்சியம் ஆகிய ஊராட்சிகளின் மக்கள்தொகை 18,303 மற்றும் பரப்பளவு 26.14 ச.கி.மீ. ஆகும். எனவே, மேற்படி, 4 ஊராட்சிகளை, பெரம்பலூர் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(9) இராமநாதபுரம் நகராட்சி:

இராமநாதபுரம் நகராட்சியுடன் அச்சுந்தன்வயல், சூரங்கோட்டை, பேராவூர், இளமனூர் (பகுதி), புத்தேந்தல் (பகுதி), சக்கரக்கோட்டை (பகுதி), இராஜசூரியமடை (பகுதி) மற்றும் பட்டிணம்காத்தான் (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்கு சென்றடையும். இதன் மூலம் இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்கு கிடைக்கும். மேலும் இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளை கொண்டுள்ளது என்றும் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த ஊராட்சிகளின் மக்கள்தொகை தோராயமாக அதிகரிப்பதாலும் இவற்றை இராமநாதபுரம் நகராட்சியுடன் இணைக்கும்பட்சத்தில் இராமநாதபுரம் நகராட்சியின் பரப்பளவு மற்றும் மக்கள் தொகை அதிகரிக்கும். எனவே, மேற்படி 8 ஊராட்சிகளை, இராமநாதபுரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(10) கீழகரை நகராட்சி:

கீழகரை நகராட்சிக்கு அருகிலுள்ள தில்லையேந்தல் (பகுதி), காஞ்சிரங்குடி (பகுதி) ஆகிய இரண்டு ஊராட்சிகளை இணைப்பதன் வாயிலாக, அப்பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். மேலும், இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கும். இதனால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும் வேலைவாய்ப்பு உருவாகவும் வருவாய் பெருகவும் வழிவகுக்கும். எனவே மேற்காணும் ஊராட்சிகளின் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு போன்ற விவரங்களின் அடிப்படையில் அவற்றின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, மேற்காணும் ஊராட்சிகளை கீழக்கரை நகராட்சியுடன் இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

(11) பரமக்குடி நகராட்சி:

பரமக்குடி நகராட்சிக்கு அருகிலுள்ள தெளிச்சாத்தநல்லூர் (பகுதி), எஸ்.அண்டக்குடி (பகுதி), வேந்தோணி (பகுதி) மற்றும் உரப்புளி (பகுதி) ஆகிய நான்கு ஊராட்சிகளை இணைப்பதன் வாயிலாக, அப்பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். மேலும், இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கும். இது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும் வேலைவாய்ப்பு உருவாகவும் வருவாய் பெருகவும் வழிவகுக்கும். எனவே மேற்காணும் ஊராட்சிகளின் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு போன்ற விவரங்களின் அடிப்படையில் அவற்றின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, மேற்காணும் 4 ஊராட்சிகளை பரமக்குடி நகராட்சியுடன் இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

(12) உடுமலைப்பேட்டை நகராட்சி:

உடுமலைப்பேட்டை நகராட்சியுடன் பெரியகோட்டை ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்குச் சென்றடையும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 33,815 மக்கள் தொகையும் மற்றும் வேகமான நகரமயமாக்கல் காரணமாக இப்பகுதியில் அதிகமான மக்கள் குடியேறி வருவதாலும் இப்பகுதிக்குக் நகர்ப்புரத்திற்கான கட்டமைப்புகள் தேவைப்படுகிறது. எனவே, மக்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் உடுமலைப்பேட்டை நகராட்சியுடன் இவ்வூராட்சியினை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(13) தாராபுரம் நகராட்சி:

தாராபுரம் நகராட்சியுடன் கவுண்டச்சிபுதூர், நஞ்சியம்பாளையம் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குச் சென்றடையும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 12,853 மக்கள் தொகையும் மற்றும் வேகமான நகர மயமாக்கல் காரணமாக இப்பகுதிகளில் அதிகமான மக்கள் குடியேறி வருவதாலும் இப்பகுதிகளில் நகர்ப்புரத்திற்கான கட்டமைப்புகள் தேவைப்படுகிறது. எனவே, மக்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் வகையில் தாராபுரம் நகராட்சியுடன் இந்த 2 ஊராட்சிகளையும் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(14) கொடைக்கானல் நகராட்சி:

கொடைக்கானல் நகராட்சியுடன் வில்பட்டி (பகுதி) ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்குச் சென்றடையும். இதன் மூலம் இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிக்கு கிடைக்கும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வில்பட்டி

ஊராட்சியின் மக்கள்தொகை 15,820 மற்றும் பரப்பளவு 175.90 ச.கி.மீ. ஆகும். எனவே, இவ்வூராட்சியினை, கொடைக்கானல் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(15) மேட்டுப்பாளையம் நகராட்சி:

மேட்டுப்பாளையம் நகராட்சியுடன் சிக்கதாசம்பாளையம் ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்குச் சென்றடையும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிக்கு கிடைக்கும். மேலும், இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளது. 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 19,049 மற்றும் பரப்பளவு 18.01 ச.கி.மீ. ஆகும். எனவே, இவ்வூராட்சியினை, மேட்டுப்பாளையம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(16) பொள்ளாச்சி நகராட்சி:

பொள்ளாச்சி நகராட்சியுடன் புளியம்பட்டி, கிட்டசூராம்பாளையம், ஆச்சிபட்டி, சின்னாம்பாளையம் மற்றும் மக்கிநாம்பட்டி ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 31,426 மற்றும் பரப்பளவு 19.77 ச.கி.மீ. ஆகும். எனவே, மேற்படி 5 ஊராட்சிகளை, பொள்ளாச்சி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(17) சிதம்பரம் நகராட்சி:

சிதம்பரம் நகராட்சியுடன் சி.தண்டேஸ்வரநல்லூர், உசுப்பூர், சிதம்பரம் நகராட்சி அல்லாதது, லால்புரம், பள்ளிப்படை மற்றும் சி.கொத்தங்குடி ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குச் சென்றடையும். இதன்மூலம், இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, மேற்படி ஊராட்சிகளை, சிதம்பரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(18) பண்ருட்டி நகராட்சி:

பண்ருட்டி நகராட்சியுடன் லஷ்மிநாராயணபுரம் மற்றும் பூங்குணம் ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர

பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, மேற்படி 2 ஊராட்சிகளை பண்ருட்டி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(19) தருமபுரி நகராட்சி:

தருமபுரி நகராட்சியுடன் இலக்கியம்பட்டி, சோகத்தூர், ஏ.ஜெட்டிஅள்ளி மற்றும் தடங்கம் ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 1.1% அளவிலேயே உள்ளன. மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, மேற்படி 4 ஊராட்சிகளை தருமபுரி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(20) பவானி நகராட்சி:

பவானி நகராட்சியுடன் அருகே குருப்பநாயக்கன்பாலையம் ஊராட்சி இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சி நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளது. எனவே, பவானி நகராட்சியுடன் இவ்வூராட்சியினை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(21) **கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சி:**

கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சியுடன் வெள்ளாளபாளையம், மொடச்சூர், குள்ளம்பாளையம் மற்றும் பாரியூர் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சியுடன் மேற்படி 4 ஊராட்சிகளை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(22) புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி:

புஞ்சைபுளியம்பட்டி நகராட்சியுடன் நல்லூர் மற்றும் நொச்சிகுட்டை ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, புஞ்சைபுளியம்பட்டி நகராட்சியுடன் மேற்படி 2 ஊராட்சிகளை இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(23) சிவகங்கை நகராட்சி:

சிவகங்கை நகராட்சியுடன் காஞ்சிரங்கால் மற்றும் வாணியங்குடி (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகரப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கஞ்சிரங்கல் மற்றும்

வாணியங்குடி ஆகிய ஊராட்சிகளின் மக்கள்தொகை 2,308 என்றும் அதன் பரப்பளவு 15.87 ச.கி.மீ. ஆகும். எனவே, மேற்படி 2 ஊராட்சிகளை, சிவகங்கை நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(24) கோவில்பட்டி நகராட்சி:

கோவில்பட்டி நகராட்சியுடன் இனாம்மணியாச்சி, மூப்பன்பட்டி, இலுப்பையூரணி, திட்டங்குளம், பாண்டவர்மங்கலம், மந்திதோப்பு மற்றும் நாலாட்டின்புதூர் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கை தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 72,563 ஆகும். எனவே, மேற்படி கோவில்பட்டி நகராட்சியுடன் இந்த 7 ஊராட்சிகளை, கோவில்பட்டி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(25) முசிறி நகராட்சி:

முசிறி நகராட்சியுடன் எம்.புதுப்பட்டி மற்றும் முத்தம்பட்டி ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த ஊராட்சிகளின் மொத்த மக்கள்தொகை 11,326 ஆகும். மேற்குறிப்பிட்ட 2 ஊராட்சிகளை முசிறி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(26) இலால்குடி நகராட்சி:

இலால்குடி நகராட்சியுடன் ஆங்கரை மற்றும் மணக்கால் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த ஊராட்சிகளின் மொத்த மக்கள்தொகை 11,034 ஆகும். மேற்குறிப்பிட்ட 2 ஊராட்சிகளை இலால்குடி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(27) துறையூர் நகராட்சி:

துறையூர் நகராட்சியுடன் மதுராபுரி மற்றும் சிங்களாந்தபுரம் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குச் சென்றடையும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த ஊராட்சிகளின் மொத்த மக்கள்தொகை 11,519 ஆகும். மேற்குறிப்பிட்ட 2 ஊராட்சிகளை துறையூர் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(28) திருவள்ளூர் நகராட்சி:

திருவள்ளூர் நகராட்சியுடன் சேலை (பகுதி), காக்களூர், ஈக்காடு, தலக்காஞ்சேரி, திருப்பாச்சூர், சிறுவானூர், மேல்நல்லத்தூர், வெங்கத்தூர் மற்றும் புட்லூர் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,303 ஆகும். மேற்குறிப்பிட்ட 9 ஊராட்சிகளை திருவள்ளூர் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(29) பொன்னேரி நகராட்சி:

பொன்னேரி நகராட்சியுடன் தடப்பெரும்பாக்கம் மற்றும் கொடூர் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10,618 ஆகும். மேற்குறிப்பிட்ட 2 ஊராட்சிகளை பொன்னேரி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(30) திருத்தணி நகராட்சி:

திருத்தணி நகராட்சியுடன் கார்த்திகேயபுரம் மற்றும் பட்டாபிராமபுரம் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. மேற்குறிப்பிட்ட, 2 ஊராட்சிகளை திருத்தணி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(31) ஆரணி நகராட்சி:

ஆரணி நகராட்சியுடன் ராட்டிணமங்கலம், இரும்பேடு, பையூர், சேவூர் மற்றும் முள்ளிப்பட்டு ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 24,270 ஆகும். மேற்குறிப்பிட்ட 5 ஊராட்சிகளை ஆரணி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(32) திருவத்திபுரம் நகராட்சி:

திருவத்திபுரம் நகராட்சியுடன் கீழ்புதுப்பாக்கம், பைங்கிணர், வடதண்டலம் மற்றும் புளியரம்பாக்கம் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 12,605 ஆகும். மேற்குறிப்பிட்ட 4 ஊராட்சிகளை திருவத்திபுரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(33) வந்தவாசி நகராட்சி:

வந்தவாசி நகராட்சியுடன் கீழ்சாத்தமங்கலம், சென்னாவரம், பாதிரி, அம்மையப்பட்டு மற்றும் செம்பூர் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 12,912 ஆகும். மேற்குறிப்பிட்ட 5 ஊராட்சிகளை வந்தவாசி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(34) மன்னார்குடி நகராட்சி:

மன்னார்குடி நகராட்சியுடன் அஷேசம் (பகுதி), மேலவாசல், நெடுவாக்கோட்டை (பகுதி), கர்னாவூர் (பகுதி), இராமாபுரம் (பகுதி) மற்றும் மூவாநல்லூர் (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை தோராயக் கணக்கெடுப்பின்படி 9,682 ஆகும். மேற்குறிப்பிட்ட 6 ஊராட்சிகளை மன்னார்குடி நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

(35) திருவாரூர் நகராட்சி:

திருவாரூர் நகராட்சியுடன் வேலங்குடி, அலிவலம் (பகுதி), கீழகாவாதுகுடி, தண்டலை, பழவனகுடி (பகுதி), புலிவலம் (பகுதி), பெருங்குடி (பகுதி), இலவங்கார்குடி, தேவர்கண்டநல்லூர், காட்டூர், அம்மையப்பன் (பகுதி) மற்றும் பெருந்தரக்குடி (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும்.

இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 45,071 ஆகும். மேற்குறிப்பிட்ட 12 ஊராட்சிகளை திருவாரூர் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**(36) விருதுநகர் நகராட்சி:**

விருதுநகர் நகராட்சியுடன் கூரைக்குண்டு (பகுதி), ரோசல்பட்டி(பகுதி) மற்றும் சிவஞானபுரம் (பகுதி) இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை தோராயக் கணக்கெடுப்பின்படி 8,003 ஆகும். மேற்குறிப்பிட்ட 3 ஊராட்சிகளை விருதுநகர் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**(37) அருப்புக்கோட்டை நகராட்சி**

அருப்புக்கோட்டை நகராட்சிக்கு அருகிலுள்ள பாலையம்பட்டி, பெரிய புளியம்பட்டி மேற்கு, கஞ்சநாயக்கன்பட்டி, ஆகிய மூன்று ஊராட்சிகளை இணைப்பதன் வாயிலாக, அப்பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். மேலும், இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கும். இது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும் வேலைவாய்ப்பு உருவாகவும் வருவாய் பெருகவும் வழிவகுக்கும். எனவே மேற்காணும் ஊராட்சிகளின் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு போன்ற விவரங்களின் அடிப்படையில் அவற்றின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, மேற்காணும் 3 ஊராட்சிகளை அருப்புக்கோட்டை நகராட்சியுடன் இணைக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

**(38) இராஜபாளையம் நகராட்சி**

இராஜபாளையம் நகராட்சிக்கு அருகிலுள்ள சமுசிகாபுரம் ஊராட்சியினை இணைப்பதன் வாயிலாக, இப்பகுதியில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். மேலும், இப்பகுதிகளில் அடிப்படை வசதிகள், உயர் கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கும். இது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும் வேலைவாய்ப்பு உருவாகவும் வருவாய் பெருகவும் வழிவகுக்கும். எனவே மேற்காணும் ஊராட்சியின் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு போன்ற விவரங்களின்

அடிப்படையில் அதன் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, மேற்காணும் ஊராட்சியை இராஜபாளையம் நகராட்சியுடன் இணைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**(39) தேனி–அல்லி நகரம் நகராட்சி:**

தேனி–அல்லி நகரம் நகராட்சியுடன் ஊஞ்சாம்பட்டி (பகுதி) மற்றும் வடபுதுபட்டி (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, மேற்படி 2 ஊராட்சிகளை தேனி–அல்லி நகரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**(40) பெரியகுளம் நகராட்சி:**

பெரியகுளம் நகராட்சியுடன் கீழவடகரை ஊராட்சி (பகுதி) மற்றும் எண்டப்புளி கிராமம் (பகுதி) ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. எனவே, மேற்படி 2 ஊராட்சிகளை பெரியகுளம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**(41) நாகப்பட்டினம் நகராட்சி:**

நாகப்பட்டினம் நகராட்சியுடன் மஞ்சக்கொல்லை (பகுதி), ஐவநல்லூர்(பகுதி), அந்தணப்பேட்டை(பகுதி) மற்றும் அக்கரைப்பேட்டை ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்படுவதால் நகராட்சியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள், சேவைகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். இதன் மூலம், இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதோடு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் இப்பகுதிகளுக்குக் கிடைக்கும். மேலும், இவ்வூராட்சிகள் நகராட்சிக்குரிய அனைத்து விதமான நகர்ப்புர பண்புகளையும் கொண்டுள்ளன. இவற்றினை நாகப்பட்டினம் நகராட்சியுடன் இணைக்கும்பட்சத்தில் இந்நகராட்சியின் பரப்பளவு மற்றும் மக்கள் தொகை அதிகரிக்கும். மேற்குறிப்பிட்ட 4 ஊராட்சிகளை நாகப்பட்டினம் நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

6. நகராட்சிகளின் எல்லை விரிவாக்கம் தொடர்பான, முக்கிய விவரங்கள் பின்வருமாறு:–

(அ) நகராட்சிகளுடன் இணைக்க பரிந்துரைக்கப்படும் ஊராட்சிகள்/ பேரூராட்சிகள் போன்றவை நகரங்களின்/ பெருநகரங்களின் நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றை தங்களது பகுதிகளில் அமையப்பெற்றுள்ளன. இப்பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் ஏராளமானோர், சுற்றியுள்ள

பேரூராட்சிகள்/ ஊராட்சிகளில் குடியிருந்து வருகின்றனர். இப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் நகர்ப்புரங்களின் எல்லையை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம் இப்பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(ஆ) நகராட்சிகளின் எல்லைகளை சுற்றி அமைந்துள்ள பெரும்பாலான பேரூராட்சிகள்/ஊரகப்பகுதிகள் நகர்ப்புர பகுதிகளுக்கு இணையான வளர்ச்சியை அடைந்து வருகின்றன. எனவே, இத்தகைய பகுதிகளில், நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது/சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

(இ) வேகமாக நகரமயமாகிவரும்/ வளர்ச்சிக்கேற்ற வகையில் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி/இடப்பற்றாக்குறை நிலவுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல், மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள்/ சேவைகளின் விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்கு தேவைப்படும் பொறியாளர்கள் உள்ளிட்ட பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளமையைக் களையவும் (to overcome) எல்லை விரிவாக்கம் அவசியமாகிறது.

(ஈ) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுடன் இவ்வாறு எல்லை விரிவாக்கம் செய்வதால், இணைக்கப்படும் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கும். இந்த மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்து தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

7. இந்நிலையில் மேலே பத்தி 5–இல் உள்ளவாறான மாவட்ட ஆட்சித்தலைவர்களின் செயற்குறிப்புகளை கவனமான பரிசீலனை செய்து, அரியலூர், பள்ளப்பட்டி, பள்ளிப்பாளையம், இராசிபுரம், குமாரபாளையம், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, பெரம்பலூர், இராமநாதபுரம், கீழ்க்கரை, பரமக்குடி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், கொடைக்கானல், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சிதம்பரம், பண்ருட்டி, தருமபுரி, பவானி, கோபிச்செட்டிப்பாளையம், புஞ்சைபுளியம்பட்டி, சிவகங்கை, கோவில்பட்டி, முசிறி, இலால்குடி, துறையூர், திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணி, ஆரணி, திருவத்திபுரம், வந்தவாசி,

மன்னார்குடி, திருவாரூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, இராஜபாளையம், தேனி–அல்லி நகரம், பெரியகுளம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 41 நகராட்சிகளுடன் முறையே அப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஊராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகளை இணைத்து 1998–ஆம் ஆண்டைய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், பிரிவு 3(2)(a)(i)–இன் படி நகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்ய உத்தேச முடிவு மேற்கொண்டு அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

8. இதனடிப்படையில், உத்தேச விரிவுபடுத்தப்படும் மேற்குறிப்பிட்டுள்ள 41 நகராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, நகராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொது தேர்தல் நடத்தப்படும்.

9. இது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், 3 ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3–ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 31.12.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

10. இவ்வரசாணையைச் செயல்படுத்துவது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

// ஆளுநரின் ஆணைப்படி //

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:–
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 600 015.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 600 009
சட்டத்துறை, சென்னை – 600 009
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம்,
சென்னை – 600 106
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம்,
சென்னை – 600 106
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வங்கல் (ந.ப.–1 மற்றும் அ.ந–2) துறை,
சென்னை – 600 009
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/2024
பிரிவு அலுவலர்

**APPENDIX**

**NOTIFICATION**

In exercise of the powers conferred by sub-clause (i) of clause (a) of sub-section (2) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intention to include the local areas specified in column (3), within the limits of Municipal Council specified in column (2) of the Table below:-

**THE TABLE**

| Sl. No. | Name of the Municipal Council | Name of the Local Areas |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Ariyalur | Valajanagaram Village Panchayat |
| | | Eruthukaranpatti Village Panchayat |
| | | Thavuthaikulam Village Panchayat |
| 2. | Pallapatti | Lingamanayakkanpatti Village Panchayat |
| 3. | Pallipalayam | Pallipalayam Agraharam Village Panchayat |
| | | Samayasangili Agraharam Village Panchayat |
| | | Elanthakuttai Village Panchayat |
| | | Kadachanallur Village Panchayat |
| | | Thattankuttai Village Panchayat |
| 4. | Rasipuram | Kalarampatti and Nehru Nagar in Chandrasekarapuram Village Panchayat |
| | | Goundampalayam Village Panchayat |
| | | Muthukalipatti Village Panchayat |
| | | Koneripatty Village Panchayat |
| | | Kattanachampatti Village Panchayat |
| | | Pattanam Town Panchayat |
| 5. | Kumarapalayam | Kuppandapalayam Village Panchayat (Part-Ward Nos. 1, 2, 3, 4, 7, 8, 9 & 10) |

| | | |
|---|---|---|
| 6. | Krishnagiri | Kattiganapalli Village Panchayat |
| 7. | Mayiladuthurai | Manakkudi Village Panchayat (Part- Ward No. 6, Karunguil Nathan Pettai) |
| | | Mannampandal Village Panchayat (Part – Ward Nos. 1, 2, 4, 5 & 6 – Moongil Thottam, Dharmapuram, Pal Pannai, Pillayar Kovil) |
| | | Mayiladuthurai Rural Village Panchayat (Part – Ward Nos. 1, 2, 3, 4 & 6 – Railadi Keela Street, Railadi Mela Street, Pillayar Kovil Street, Venkatesan Nagar, Mayil Nagar (Indira Nagar), Siva Nagar, Saradha Nagar, Namachivaya Nagar) |
| | | Nallathukudi Village Panchayat (Part- Ward Nos. 1, 2, 3 & 6 – Perumal Kovil Street, Pillayar Kovil Street, Kalaignar Colony, VIP Nagar, Mela Street (Part), Om Sakthi Nagar) |
| | | Pattamangalam Village Panchayat (Part- Ward Nos. 3, 4 & 6 – From ARC Rathinam Nagar to Ponni Nagar, Kumaran Street, Thenperum Jothi Nagar, Narayanan Nagar, R.K. Nagar, Vallalar Street, Anna Nagar, Indira Gandhi Street, Periyar Street, Dayalan Vasuki Nagar, Thendral Nagar, Jothi Nagar<br>1st, 2nd and 3rd Street, Abdul Kalam Nagar, Kakkan Street, Poongavanam Street and Thirumurugan Nagar) |
| | | Sittharkadu and Mappadugai Village Panchayat (Part- Narayanapuram, Avaiyambalpuram) |
| | | Thiruindalur Village Panchayat (Part – Pottaveli Main Road, Sri Nagar, Padasalai Street, V.O.C. Street and upto Pallavarayanpettai Petrol Bunk) |
| | | Vellalagaram Village Panchayat (Part – C.K.S. Nagar, Thirumalai Nagar, Balaji Nagar, Pasupathi Agragaram, Valampuri |

| | | |
|---|---|---|
| | | Nagar, Kooturavu Nagar, Ram Nagar, Rasi Nagar, Gokulam Nagar, Thangavel Vandaiyar Nagar, Sundaresan Nagar, Kanagasabai Nagar, Atrangarai Street, New Telecom Nagar and Chetty Street) |
| 8. | Perambalur | Elambalur Village Panchayat |
| | | Koneripalayam Village Panchayat |
| | | Kavulpalayam Village Panchayat (Part – 1556 House Holds Only- Ward No.1) |
| | | Nochiyam Village Panchayat (Part – 260 House Holds Only-Ward Nos.3 & 5) |
| 9. | Ramanathapuram | Achundanvayal Village Panchayat |
| | | Surankottai Village Panchayat |
| | | Peravoor Village Panchayat |
| | | Ilamanoor Village Panchayat (Part – Manjalodai, Merkku Ilamanoor, Palangulam, Palangulam Colony) |
| | | Puthendhal Village Panchayat (Part – Kooriyoor) |
| | | Sakkarakottai Village Panchayat (Part – Ayuthapadai, Bharathi Nagar, Sakkarakottai, Kambar Street, Keela Chothuoorani, M.G.R. Nagar, Mela Chothuoorani, Nehru Nagar, Pasumpon Nagar, Sethu Nagar, Sivagnanapuram, V.O.C. Nagar, Manthoppu Maha Sakthi Nagar, Jothi Nagar, Mullai Nagar, Adam Nagar, Manjana Mariamman Nagar) |
| | | M.S.K Nagar in Rajasuryamadai Village Panchayat |
| | | Pattinamkattan Village Panchayat (Part – Om Sakthi Nagar, Bharathi Nagar, Jawahar Nagar, Otha Veedu, Pattinamkathan, Ram Nagar, Sethupathi Nagar, Subbaiah Nagar, Therukku Colony, Vannan Oorani) |
| 10. | Keelakkarai | Thillaiyendal Village Panchayat (part - Marudanthoppu, Muneeswarram, Thattanthoppu, Bharathinagar, 500 plot, Indra Nagar) |

| | | |
|---|---|---|
| | | Kaanjirangudi Village Panchayat (part - Gokul Nagar) |
| 11. | Paramakudi | Thelichathanallur Village Panchayat (part- Moovendar Nagar, Sidco, Nehru Nagar, Thiru Nagar, V.O.C Nagar, Sakthi Nagar, Kani Nagar) |
| | | S. Andakkudi Village Panchayat (part - Pambuvizhunthan, Rajiv Nagar, Barma colony) |
| | | Vendoni Village Panchayat (part - Marakkayarpattinam, Ulaganathapuram, Saraswathi Nagar, Kamatchipuram, vendoni (Ward No-5)) |
| | | Urappuli Village Panchayat (part- Sundhar Nagar (Ward Nos - 1,2,3 & 4), Thandradevi pattinam (Ward No -4)) |
| 12. | Udumalapet | Periakottai Village Panchayat |
| 13. | Dharapuram | Kavundachipudur Village Panchayat |
| | | Nanjiyampalayam Village Panchayat |
| 14. | Kodaikanal | Vilpatti Village Panchayat (Part – Anna Ramasamy Nagar, Thiruvalluvar Nagar, Gurusamy Pallam and Kurinji Nagar) |
| 15. | Mettuppalayam | Chickadasampalayam Village Panchayat |
| 16. | Pollachi | Puliampatti Village Panchayat |
| | | Kittasurampalayam Village Panchayat |
| | | Achipatti Village Panchayat |
| | | Chinnampalayam Village Panchayat |
| | | Makkinampatti Village Panchayat |
| 17. | Chidambaram | C. Thandeswaranallur Village Panchayat |
| | | Usuppur Village Panchayat |
| | | Chidambaram Non-Municipal Village Panchayat |
| | | Lalpuram Village Panchayat |
| | | Pallipadai Village Panchayat |
| | | C.Kothangudi Village Panchayat |

| | | |
|---|---|---|
| 18. | Panruti | Lakshminarayanapuram Village Panchayat |
| | | Poongunam Village Panchayat |
| 19. | Dharmapuri | Lakkiampatti Village Panchayat |
| | | Sogathur Village Panchayat |
| | | A. Jettihalli Village Panchayat |
| | | Thadangam Village Panchayat |
| 20. | Bhavani | Kuruppanaickenpalayam Village Panchayat |
| 21. | Gobichettipalayam | Vellalapalayam Village Panchayat |
| | | Modachur Village Panchayat |
| | | Kullampalayam Village Panchayat |
| | | Pariyur Village Panchayat |
| 22. | Punjaipuliyampatti | Nochikuttai Village Panchayat |
| | | Nallur Village Panchayat |
| 23. | Sivagangai | Kanjirangal Village Panchayat |
| | | Vaniangudi Village Panchayat (Part-Ward No.8(Part) & Except Ward Nos.2 & 7) |
| 24. | Kovilpatti | Inam-maniyachi Village Panchayat |
| | | Mooppanpatti Village Panchayat |
| | | Iluppaiyurani Village Panchayat |
| | | Thittangulam Village Panchayat |
| | | Pandavarmangalam Village Panchayat |
| | | Manthithoppu Village Panchayat |
| | | Nalatinpudur Village Panchayat |
| 25. | Musiri | M. Pudupatti Village Panchayat |
| | | Muthampatti Village Panchayat |
| 26. | Lalgudi | Angarai Village Panchayat |
| | | Manakkal Village Panchayat |
| 27. | Thuraiyur | Madurapuri Village Panchayat |
| | | Singalandapuram Village Panchayat |

| | | |
|---|---|---|
| 28. | Tiruvallur | Selai (Part – 1/8) Village Panchayat |
| | | Kakkalur Village Panchayat |
| | | Ikkadu Village Panchayat |
| | | Thalakancheri Village Panchayat |
| | | Thirupachur Village Panchayat |
| | | Vengathur Village Panchayat |
| | | Melnallathur Village Panchayat |
| | | Putlur Village Panchayat |
| | | Siruvanur Village Panchayat |
| 29. | Ponneri | Thadaperumbakkam Village Panchayat |
| | | Kodur Village Panchayat |
| 30. | Tiruttani | Karthikayapuram Village Panchayat |
| | | Pattabiramapuram Village Panchayat |
| 31. | Arani | Rattinamangalam Village Panchayat |
| | | Irumbedu Village Panchayat |
| | | Paiyur Village Panchayat |
| | | Sevur Village Panchayat |
| | | Mullipattu Village Panchayat |
| 32. | Tiruvathipuram | Kilpudupakkam Village Panchayat |
| | | Painkinar Village Panchayat |
| | | Vadathandalam Village Panchayat |
| | | Puliyarambakkam Village Panchayat |
| 33. | Vandavasi | Kilsathamangalam Village Panchayat |
| | | Sennavaram Village Panchayat |
| | | Padiri Village Panchayat |
| | | Ammayampattu Village Panchayat |
| | | Sembur Village Panchayat |
| 34. | Mannargudi | Asesham Village Panchayat (Part – Asesham, Illakkanampettai, Singankulam) |
| | | Melavasal Village Panchayat |
| | | Karnavur Village Panchayat (Part – Pamani, Kuruvaimozhi, Munnali kattalai, |

| | | |
|---|---|---|
| | | Punniyakudi, Theventhirapuram, Vadakku Udaiyar Maniam, Sethalacherry, Ullurvattam, Therkku Udaiyar Maniam) |
| | | Neduvakkottai Village Panchayat (Part - Neduvakkottai) |
| | | Ramapuram Village Panchayat (Part – Vanchiyur) |
| | | Moovanallur Village Panchayat (Part - Moovanallur) |
| 35. | Tiruvarur | Thandalai Village Panchayat |
| | | Keelakavathugudi Village Panchayat |
| | | Palavanakkudi Village Panchayat (Part – Maruthapattinam- Ward Nos.1 (Full) & 7 (Full),<br>2 (Part), 5 (Part) & 6 (Part)) |
| | | Alivalam Village Panchayat (Part – Sundaravilagam) |
| | | Devarkandanallur Village Panchayat |
| | | Elavangargudi Village Panchayat |
| | | Kattur Village Panchayat |
| | | Velangudi Village Panchayat |
| | | Pulivalam Village Panchayat (Part – Thiru-Vi-Ka Nagar, Pulivalam, Thiruvasal, Vishnu Thoppu) |
| | | Perungudi Village Panchayat (Part – Keelapadugai, Thenkarai Velankudi, Perungudi) |
| | | Ammaiyappan Village Panchayat (Part – Anai Vadapathi, Alangudi, Otcheri, Thenkal, Illangudi - Ward Nos.<br>1 (Full), 2 (Full), 9 (Full),<br>6 (Part), 10 (Part) & 12 (Part)) |
| | | Perunthatakkudi Village Panchayat (Part-Meppalam, Vellakudi, Puliyur, Perunthatakudi, Vadakku Veethi) |
| 36. | Virudhunagar | Allampatti, Muthuramanpatti, Kottaipatti and Kumarasamypuram in Kooraikundu Village Panchayat |

| | | |
|---|---|---|
| | | Rosalpatti, Kumarapuram and Renganathapuram in Rosalpatti Village Panchayat |
| | | Chinnamuppanpatti, Pelampatti and Lakshmi Nagar in Sivagnanapuram Village Panchayat |
| 37. | Aruppukkotttai | Palayampatti Village Panchayat (part - Ward Nos.6 (Part), 7 (Part) & 8 (Full), 9 (Full), 10 (Full), 11 (Full), 12 (Full), 13 (Full), 14 (Full) & 15 (Full)) |
| | | Periyapuliyampatti west |
| | | Kanjanaickkenpatti (part-Ward No.1 (Part)) |
| 38. | Rajapalayam | Samsigapuram Village Panchayat (Chokkalinga puram, Ghandhi nagar, Maruthi nagar, Meenatchi puram, Mill.Krishna puram, Muthumari nagar, P.T.R nagar, V.O.C nagar, Velayutha puram, Samsiga puram, P.R.R Nagar, Kalingal-Velayutha puram, Ambedkar nagar-Samsiga puram, Velthevar nagar, Ganapathi puram, Indra nagar- Velayutha puram) |
| 39. | Theni Allinagaram | Unjampatty Village Panchayat (Part – Ward Nos.8 (Full), 9 (Full), 12 (Full), 11 (Full) & 10 (Part)) |
| | | Vadapudupatti Village Panchayat (Part of Ward No.8) |
| 40. | Periyakulam | Keelavadagarai Village Panchayat (Part – SBI Colony) |
| | | Endapuli Village Panchayat (STP Site - Ward Nos.5 (Part) & 7 (Part)) |
| 41. | Nagapattinam | Manjakollai Village Panchayat (Part – Ward Nos.3, 4 & 5) |
| | | Ivanallur Village Panchayat (Part – Ward Nos. 3 & 4) |
| | | Andanapettai Village Panchayat (Part – Ward No. 6) |
| | | Akkaraipettai Village Panchayat |

Based on the above inclusion, wards will be divided for the next General election.

2. Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any municipal council affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St. George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D. KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**SECTION OFFICER**